DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.70/2018
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW5 (LW5)
Defence

Name : Ramamoorthy

Father Name /
Husband Name : Elumalai

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 8th May 2026.

எதிரி ஆஜர்.

சாட்சியை வானூர் காவல் நிலைய தலைமைகாவலர் திரு.சுதாகர் என்பவர் அடையாளம் காண்பித்தார்.

முதண்மை விசாரணை

நான் திருவக்கரையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். அசா.1 முத்துக்கிருஷ்ணன் அசா.2 சிவக்குமார் ஆகியோர்களை

தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அனுமதியளித்ததின் பேரில் தற்போது சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரி எனக்கு நன்கு பழக்கமான எனது ஊரைச் சேர்ந்தவர். போலீசார் விசாரணையில் 27.01.2018 காலை 07.00மணிக்கு நானும் முத்துக்கிருஷ்ணன்,சிவக்குமார் ஆகியோர்கள் மாட்டுவண்டியில் மணலை ஏற்றிக்கொண்டு எறையுர் கிராமம் ஈஆர் காம்ப்ளக்ஸ் பின்புறம் சுடுகாட்டு பாதை அருகே ஜிடி ஏழுமலை என்பவருக்கு சொந்தமான எம்சாண்ட் தயாரிக்கும் டிரஷரில் மணலை இறக்கி கொண்டு இருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி முத்துக்கிருஷ்ணனை அசிங்கமாக திட்டி எனக்கு போட்டியா வரியா என்று திட்டி மண்வெட்டியின் மரப்பிடியால் முத்துக்கிருஷ்ணன் தலையில ்அடிக்க முற்பட்டபோது முத்துக்கிருஷ்ணன் வலதுகையால் தடுத்ததால் அவரது வலதுகையில் பலத்த அடிப்பட்டது என்றும் ஆஜர் எதிரி முத்துக்கிருஷ்ணனுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் மீண்டும் ஆஜர் எதிரி முத்துக்கிருஷ்ணனை தாக்க முற்பட்டபோது நானும் சிவக்குமாரும் ஓடிச்சென்று நந்தகுமாரை தடுத்து சண்டையை விலக்கிவிட்டோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசு தரப்பு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

ஒம்/-XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.